செய்தி வெளியீட்டு எண்—394 நாள்— 18.07.2009

<u>செய்தி வெளியீடு</u>

## தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள் கலந்தாய்வு கூட்டம்

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை படிப்படியாக பல்கலைக் கழகங்களாக உயர்த்துவது மற்றும் பொதுப் பல்கலைக் கழகச் சட்டம் உருவாக்குவது குறித்து விவாதித்து முடிவெடுக்க உயர்கல்வி மன்றமும், முன்னாள் துணை வேந்தர்கள் திரு.வா.செ.குழந்தைசாமி, திரு.அனந்தகிருஷ்ணன், திரு.ஜெகதீசன் மற்றும் மாநில திட்ட குழு துணைத்தலைவர் திரு.நாகநாதன் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு உருவாக்கப்படும் என்றும் —

அக்குழுவிற்கு கல்வியாளர்களும், மாணவர்களும் தங்கள் கருத்துக்களை அறிவித்திட வேண்டும் என்றும், இக்குழு ஒரு மாதத்திற்குள்ளாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

க.கணேசன்
அரசு முதன்மை செயலாளர்
உயர்கல்வித்துறை

**********

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.